ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த பெருமாள் திருமோழி

# 7 – ஆலைநீள் கரும்பு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 7 – ஆலைநீள் கரும்பு

‡ ஆலை நீள் கரும்பன்னவன் தாலோ ⋆
அம்புயத் தடங்கண்ணினன் தாலோ ⋆
வேலை நீர் நிறத்தன்னவன் தாலோ ⋆
வேழப் போதகம் அன்னவன் தாலோ ⋆
ஏல வார் குழல் என் மகன் தாலோ ⋆
என்றென்றுன்னை என் வாயிடை நிறையத் ⋆
தால் ஒலித்திடும் திருவினை இல்லாத் ⋆
தாயரில் கடை ஆயின தாயே ‖ **7.1** ‖

வடிக் கொள் அஞ்சனம் எழுது செம் மலர்க் கண் ⋆
மருவி மேல் இனிதொன்றினை நோக்கி ⋆
முடக்கிச் சேவடி மலர்ச் சிறு கருந்தாள் ⋆
பொலியும் நீர் முகிற் குழவியே போல ⋆
அடக்கியாரச் செஞ்சிறு விரல் அனைத்தும் ⋆
அங்கையோடணைந்தானையிற் கிடந்த ⋆
கிடக்கை கண்டிடப் பெற்றிலன் அந்தோ ⋆
கேசவா ! கெடுவேன் கெடுவேனே ‖ **7.2** ‖

முந்தை நன்முறை அன்புடை மகளிர் ⋆
முறை முறை தம் தம் குறங்கிடை இருத்தி ⋆
எந்தையே ! என்தன் குலப் பெரும் சுடரே ⋆
எழு முகில் கணத்தெழில் கவர் ஏறே ⋆
உந்தை யாவன் என்றுரைப்ப ⋆

நின் செங்கேழ் விரலினும் கடைக் கண்ணினும் காட்ட ⋆
நந்தன் பெற்றனன் நல் வினை இல்லா ⋆
நங்கள் கோன் வசுதேவன் பெற்றிலனே ‖ **7.3** ‖

களிநிலா எழில் மதி புரை முகமும் ⋆
கண்ணனே ! திண்கை மார்வும் திண் தோளும் ⋆
தளி மலர்க் கருங்குழல் பிறை அதுவும் ⋆
தடங்கொள் தாமரைக் கண்களும் பொலிந்த ⋆
இளமை இன்பத்தை இன்றென்தன் கண்ணால் ⋆
பருகு வேற்கிவள் தாயென நினைந்த ⋆
அளவில் பிள்ளைமை இன்பத்தை இழந்த ⋆
பாவியேன் எனதாவி நில்லாதே ‖ **7.4** ‖

மருவும் நின் திரு நெற்றியில் சுட்டி அசைதர ⋆
மணி வாயிடை முத்தம் தருதலும் ⋆
உன்தன் தாதையைப் போலும் வடிவு கண்டு கொண்டு ⋆
உள்ளம் உள் குளிர ⋆
விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து ⋆
வெகுளியாய் நின்றுரைக்கும் அவ்வுரையும் ⋆
திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் ⋆
எல்லாம் தெய்வ நங்கை யசோதை பெற்றாளே ‖ **7.5** ‖

தண்ணந் தாமரைக் கண்ணனே கண்ணா ⋆
தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர் நடையால் ⋆
மண்ணில் செம் பொடி ஆடி வந்து ⋆
என்தன் மார்வில் மன்னிடப் பெற்றிலேன் அந்தோ ⋆
வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும் ⋆
வாரி வாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில் ⋆

உண்ணப் பெற்றிலேன் ஓ ! கொடு வினையேன் ⋆
என்னை என் செய்யப் பெற்றதெம் மோயே ॥ **7.6** ॥

குழகனே ! என்தன் கோமளப் பிள்ளாய் ⋆
கோவிந்தா ! என் குடங்கையில் மன்னி ⋆
ஒழுகு பேர் எழில் இளம் சிறு தளிர் போல் ⋆
ஒரு கையால் ஒரு முலை முகம் நெருடா ⋆
மழலை மென்னகை இடை இடை அருளா ⋆
வாயிலே முலை இருக்க என் முகத்தே ⋆
எழில் கொள் நின் திருக் கண்ணிணை நோக்கந் தன்னையும் ⋆
இழந்தேன் இழந்தேனே ॥ **7.7** ॥

முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டுண்ணும் ⋆
முகிழ் இளம் சிறுத் தாமரைக் கையும் ⋆
எழில் கொள் தாம்பு கொண்டடிப்பதற் கெள்கு நிலையும் ⋆
வெண் தயிர் தோய்ந்த செவ்வாயும் ⋆
அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும் ⋆
அணி கொள் செஞ்சிறு வாய் நெளிப்பதுவும் ⋆
தொழுகையும் இவை கண்ட அசோதை ⋆
தொல்லை இன்பத்திறுதி கண்டாளே ॥ **7.8** ॥

குன்றினால் குடை கவித்ததும் ⋆
கோலக் குரவை கோத்ததும் குடம் ஆட்டும் ⋆
கன்றினால் விளவெறிந்ததும் ⋆
காலால் காளியன் தலை மிதித்ததும் முதலா ⋆
வென்றி சேர் பிள்ளை நல் விளையாட்டம் அனைத்திலும் ⋆
அங்கென் உள்ளம் உள் குளிர ⋆

ஒன்றும் கண்டிடப் பெற்றிலேன் அடியேன் ⋆
காணும் ஆறினி உண்டெனில் அருளே ‖ **7.9** ‖

வஞ்ச மேவிய நெஞ்சுடைப் பேய்ச்சி ⋆
வரண்டு நார் நரம்பெழக் கரிந்துக்க ⋆
நஞ்சம் ஆர்தரு சுழி முலை அந்தோ ⋆
சுவைத்து நீ அருள் செய்து வளர்ந்தாய் ⋆
கஞ்சன் நாள் கவர் கரு முகில் எந்தாய் ⋆
கடைப்பட்டேன் வறிதே முலை சுமந்து ⋆
தஞ்ச மேல் ஒன்றிலேன் உய்ந்திருந்தேன் ⋆
தக்கதே நல்ல தாயைப் பெற்றாயே ‖ **7.10** ‖

‡ மல்லை மா நகர்க்கிறையவன் தன்னை ⋆
வான் செலுத்தி வந்தீங்கணை மாயத்து ⋆
எல்லையில் பிள்ளை செய்வன காணாத் ⋆
தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல் ⋆
கொல்லி காவலன் மால் அடி முடி மேல் ⋆
கோலமாம் குலசேகரன் சொன்ன ⋆
நல் இசைத் தமிழ் மாலை வல்லார்கள் ⋆
நண்ணுவார் ஒல்லை நாரணன் உலகே ‖ **7.11** ‖

அடிவரவு — ஆலை வடி முந்தை களி மருவு தண்ணம் குழகன் முழுதும் குன்றினால் வஞ்சம் மல்லை மன்னு

ஆலைநீள் கரும்பு முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்